விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஸூ சித்திரை மீ 24-ம் உ | வெள்ளிக்கிழமை | (06 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 09 | ஓசை 47

LIBRARIAN
PUBLIC LIBRARY
JAFFNA

## ஆக்கபூர்வமானதும் அர்த்தமுள்ளதுமான அபிப்பிராயங்களை புலிகள் வரவேற்பர்

(யாழ்ப்பாணம்)

மக்களிடம் இருந்து பல்வேறுபட்ட விடயங்களிலும் ஆக்க பூர்வமானதும், அர்த்தமுள்ளதுமான அபிப்பிராயங்களை தாம் எதிர்பார்ப்பதாக விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பானு தெரிவித்துள்ளார். மேலும் மக்கள் அச்சம் இன்றிக் குறைகளைச் சுட்டிக் காட்டலாம் எனவும், இக் குறைகள் சரியானவைகளாக இருப்பின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க இது உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ் அபிப்பிராயங்களை எழுத்து மூலம், நேரில் தரலாம் எனவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள அபிப்பிராயப் தபால் பெட்டிகளில் போடலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# அரசு - புலிகள் உறவு பாதிப்பில்லை!

# குலைக்கும் முயற்சி பலிக்காது

## இந்திய பத்திரிகையாளர் கேள்விக்கு ஜெனரல் சிறில் ரணதுங்கா பதில்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நல்ல புரிந்துணர்வும் நட்புறவும் இருந்து வருகிறது. இந்த உறவு தொடர்ந்தும் இருந்துவரும் இதைக் கெடுப்பதற்கும் குலைப்பதற்கும் சில தீய சக்திகள் முயன்று வருகின்றன. ஆனால் இதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்"

இவ்வாறு இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் முன்னாள் முப்படைக் கூட்டுத் தளபதியுமான ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்று வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் இந்தியப் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா, ஜெனரல் சிறில் ரணதுங்காவும் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் அரச படைகளுடன் முறுகிக் கொள்கிறார்களென்றும் இந்த நிலையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலுள்ள நட்புறவு எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமென நினைக்கிறீர்கள் என்று இந்தியப்பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட போதே ஜெனரல் சிறில் ரணதுங்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கீழ் மட்டத்தில் சில சமயங்களில் சில இடங்களில் முறுகலும் உரசலும் ஏற்பட்டா

(6ஆம் பக்கம் பார்க்க)

## நிதர்சனம் பற்றிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மிக விரைவில் வடபகுதிக்கு நிதர்சனம் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதால் இதுபற்றிய கூட்டம் யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னால் அமைந்துள்ள நிதர்சனம் தொலைக்காட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வடபகுதியில் உள்ள அறிஞர்கள் கலைஞர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் செஞ்சிலுவைச் சங்க கொடி விற்பனை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி பிரிவு நேற்று கொடிதினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது.

பல இடங்களில் செஞ்சிலுவைச்சங்க ஊழியர்களினால் கொடிகள் விற்கப்பட்டன. கிளிநொச்சி செயலக ஊழியர்கள் அனைவரும் கொடிகளை அணிந்து தத்தமது கடமைகளை செய்தனர். இது மிகவும் சிறப்பாகக் காட்சி அளித்தது. (43)

## மூன்றுமாதம் பெறாவிட்டால்

## ஆயிரம் பஸ்கள் இறக்குமதி

(கொழும்பு)

தனியார் போக்குவரத்துச் சங்கத்துக்கு அரசாங்கத்தால் வழங்கப்படவிருக்கும் நிதி உதவியின் கீழ் 1000 பஸ்கள் எதிர்வரும் ஜூன்மாதம் இறக்

மக்கள் வங்கியில் பணமாகச் செலுத்திப் பற்றுச் சீட்டை தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மிகுதிப் பணத்தைக் கடனாக அர

## புத்தக விற்பனை நிலையங்கள் நாடு முழுவதும் நிறுவப்படும்!

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கு வசதியாக நாடு முழுவதும் புத்தக விற்பனை நிலையங்களை அமைக்க அரச அச்சகக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலைப் பிள்ளைகள் தமக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள், நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள் உட்பட மாணவர்களின் உபகரணங்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை கூடிய விரைவில் அமுல்படுத்துக

(யாழ்ப்பாணம்)

விலைக்கட்டுப்பாட்டு சட்டத்தையும் பாவனையாளர் பாதுகாப்பு சட்டத்தையும் கூடியளவு விரைவில் அமுல்படுத்தும்படி விலைக்கட்டுப்பாட்டு தலைமைக் காரியாலயத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. என யாழ்ப்பாணம் செயலக உணவு கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவிக்கிறார்.

மேலும் அவர் கூறுகையில் இவ்வுத்தரவு தமக்கு இடப்பட்டுள்ளதுடன் இதனை உடன் அமுல்படுத்தப்படாதவிடத்து தமக்கு இடமாற்றம் செய்யப்படுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இச்சட்டத்தை அமுல்படுத்துவதையும் நடைமுறைக்கு கொண்டுவருவதையும் பற்றி அவரிடம் கேட்ட பொழுது தற்போது சிவில் நிர்வாகமோ அன்றி நீதிமன்றங்களோ இயங்காத வேளையில் நாம் இந்நடவடிக்கைகளை அமுலுக்குக் கொண்டுவருவது மிகவும் கடினமே. என்றாலும் அரசாங்க அதிபர் மூலமாக இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முயற்

(6ஆம் பக்கம் பார்க்கம்)

## நிவாரணம் பெறாதவர்களுக்கு நிவாரணப்படிவம் வழங்கப்படும்

## வர்த்தகர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த சகல வர்த்தகர்களையும், தொழிலதிபர்களையும் 07-04-1990 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில், யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திற்குத் தவறாது சமூகம் தரும்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் துண்டுப் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

## கிளிநொச்சியிலேயே ஓய்வூதியம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் இரண்டாம் திகதியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமது ஓய்வூதியக் கட்டுப்பணங்களை கிளிநொச்சி மாவட்டத்திலேயே தமக்கு அண்மையில் உள்ள கிராமிய வங்கிகளில் கட்டும்படி யாழ் கமநலசேவைகள் செயலகம் வேண்டிக்கொள்கிறது. (லோ)

## மூன்றுமாதம் பெறாவிட்டால்

### ஒய்வூதியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

மூன்று மாதங்களுக்கு ஒய்வூதியம் பெறத்தவறும் ஒய்வூதியர்களுக்கு ஒய்வூதியம் நிறுத்திவைக்கப்படும் என சம்மந்தப்பட்ட அதிகாரி தெரிவிக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில் ஒய்வூதியத்தை மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து பெறாது விட்டு பின்பு எம்மிடம் வந்து முறையிடுபவர்கள் இனிமேல் இருக்கக் கூடாது என்றும் அவர்களுடையவேண்டுகோள் கண்டிப்புடன் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## காணி உறுதியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்

(யாழ்ப்பாணம்)

1988ஆம் ஆண்டு மார்கழி மாதம்வரைக்கு எழுதப்பட்ட காணி உறுதிகள் வரும் புது வருடப் பிறப்பு முடிந்ததும் 16ஆம் திகதியளவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

1988 மார்சுழி கால கட்டத்திற்குரிய காணி உறுதிகளும் அவற்றின் மூலப்பிரதிகளும் அத்துடன் இவற்றிற்குரிய இணைப்பிரதிகளும் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளதாக யாழ். காணிப்பதிவாளர் அலுவலக அதிகாரி தெரிவிக்கிறார். (லோ)

சங்கத்துக்கு அரசாங்கத்தால் வழங்கப்படவிருக்கும் நிதி உதவியின் கீழ் 1000 பஸ்கள் எதிர்வரும் ஜூன்மாதம் இறக்குமதி செய்யப்படவுள்ளன. பஸ்ஸின் பெறுமதியில் 25% தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மிகுதிப் பணத்தைக் கடனாக அரசாங்கம் வழங்கவுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களினது சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக புதிய உணவுக் கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

தமது அமைச்சுக்குச் சென்ற அவர், அதிகாரிகள், ஊழியர்களுடன் பேச்சு நடத்தினார்.

### மல்லிமாராச்சி

நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விபரங்களைத் தமக்குத் தருமாறும் அவர் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹாட்லிமெதடிஸ்கல்லூரிகளுக்கு புதிய கட்டிடங்கள்

(பருத்தித்துறை)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி இரண்டிலும் புதிய கட்டிடங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஹாட்லிக் கல்லூரிச்கு பன்னிரண்டு மில்லியன் ரூபாவும், மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கு பத்து மில்லியன் ரூபாவும் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த இரு கல்லூரிகளும் இராணுவ நடவடிக்கைகளின்

(6ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## கிராமசேவகரை இடம்மாற்ற இடமாற்றசபை அமையும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமசேவை அலுவலகர்களுக்கான இடமாற்றம் மேற்கொள்ள இடமாற்ற சபையொன்று அமைக்கப்படும். இச் சபையில் கிராம சேவை அலுவலகர் சங்க பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள்.

இத்தகவலை மட்டக்களப்பு அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் கிழக்கிலங்கை கிராமசேவை அலுவலகர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடாத்திய சந்திப்பில் தெரிவித்தார்.

தலைவர் திரு. எஸ். சுப்பி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பிரதேசத்தில் குற்றச்செயல்கள் குறைவு

(வவுனியா)

புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வவுனியா பகுதி வந்த பிறகு கொலை, கொள்ளை போன்ற சமூகவிரோதச் செயல்கள் இங்கு நின்றுவிட்டன. இப்போது மக்கள் நிம்மதியாக வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்கண்டவாறு வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. நவரட்ணராஜா தெரிவித்தார்.

இந்திய இராணுவத்தினர் வவுனியாவில் இருந்த போது

(6ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் பெறாதவர்களுக்கு நிவாரணப்படிவம்.வழங்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் இதுவரை நிவாரணப் படிவம் பெறாதவர்களுக்கு, நிவாரணப் படிவம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அரச அதிபர், திரு, ஆர். யோகநாதன் 'ஈழநாதம்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேற்படி படிவம் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் காரணமாகச் சிலருக்குக் கிடைக்கவில்லை என ஈழநாதம் செய்தியாளர் அவரிடம்பிரஸ்தாபித்தபோது அவர் மெலும் தெரிவித்ததாவது:

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்புப் பதியும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 26ஆம் திகதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பதியும் நடவடிக்கைகள் யாவும் இம்மாதம் பத்தாம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படஉள்ளது.

பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் இவற்றை பதி

(6ஆம் பக்கம் பார்க்க)

பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இச்சட்டத்தை அமுல்படுத் அதிபர் மூலமாக இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முயற்

(6ஆம் பக்சம் பார்க்கம்)

## பயிலுனர் ஆசிரியர் புகார் ஆராய உயர் குழு

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்து பயிலுனர் ஆசிரியருக்கான மேல்முறையீடுகள் வந்துகொண்டிருப்பதால் ஐந்து பேர்கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டு அக்குழுவிடம் மேல்முறையீடுகளை ஆய்வு செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்படும் என யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவிக்கிறார்!

இது பற்றி அவர் மேலும் கூறுகையில் முதல்அட்டவணையில் பேர் குறிப்பிடப்பட்டு பின் இரண்டாவது அட்டவணையில் மறுக்கப்பட்டவர்கள் கூடுதலாக இரண்டு அல்லது மூன்று தரம் கூட மேன்முறையீட்டுக்கு கடிதமூலமும் நேராகவும் வந்து கேட்டுக் கொண்டதற்கிணங்கவே தாம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார். (லோ)

## அமைச்சர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்

(கொழும்பு)

அமைச்சரவையில் ஆராயப்படும் விடயங்கள் ஏதோ ஒரு வகையில் பத்திரிகையாளர்கள் சிலருக்கு கிடைத்து விடுகின்றன. வெகுஜனத் தொடர்பு ஸ்தாபனங்களைப் பொறுத்த மட்டில் அமைச்சரவை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி சகல அமைச்சுக்களுக்கும் ஜனாதிபதி தெளிவாக விளக்கியுள்ளதாக நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான சண்டே

(6ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## 4000ரூபா நிவாரணத்தை இரு தடவைகள் பெற்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 32 பேர் புனர்வாழ்வுக் கொடுப்பனவுரூபா 4000த்தை இருதடவைகளில் பெற்றுள்ளார்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காசோலைகள் 32 கிராமசேவை அலுவலகர்களால் மீளப்பெற்றுப் புனர்வாழ்வுப் பகுதியில் கையளிக்கப்பட்ட போதிலும் அக்காசோலைகள் மர்மமான முறையில் மாற்றப்பட்டுள்ளது.

கடந்தகால செயலக நிர்வாகத்தில் காணப்பட்ட மேற்படி மோசடிகள் தற்போதைய நிர்வாகத்தினால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

மேற்படி மோசடியால் செயலகத்தில் முன்பு கடமையாற்றிய ஒரு அதிகாரி சம்பந்தப்பட்டிருக்கலாம் என தெரிய வருகிறது.

## புத்தாண்டை முன்னிட்டு வவுனியா நகர் குதூகலம்

(வவுனியா)

வவுனியா மக்கள் இந்த வருடம் தமிழ்ப் புத்தாண்டை விமரிசையாகக் கொண்டாட எண்ணியுள்ளனர்.

கடந்த ஆறு வருட காலத்திற்குப் பின்னர் அமைதியற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வந்த மக்கள், எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டைக் குதூகலத்துடன் கொண்டாட உள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதையும், துணிகள் மற்றும் பொருட்கள் கொள்வனவு செய்பவர்களின் தொகை கூடியிருப்பதையும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பண்டிதர்களுக்குதகுந்தசம்பளம் வழங்க ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் பரீட்சையில் சித்தி எய்திய ஆசிரியர்களாக தொழில் செய்யும் பண்டிதர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்குவதற்கான ஒரு ஆலோசனைக் கூட்டம் வரும் 8ஆம் திகதி ஏப்பிரல் மாதம் வண்ணை நாவலர் வித்தியா

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோறெக் கோடிங்கிற்கும், ரி.விஅன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகல விதமான ரி.வி டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாட வேண்டிய இடம்: NEW VENUS No:60, Stanley Road Jaffna. (B-538)

நாவலடி அரியாலையில்றோட்டுக்குஅருகாமையில் நெற்காணி 58 பரப்பு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொ. கனகசபாபதிஐயர்சந்தசுவாமி கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (R-75)

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M. 777 K.K.S. Road Jaffna. (B-507)


# யாழ்ப்பாணத்தில் இவ்வருடத்திற்குள் 17,384 வீடுகள் கட்டப்படும்

இவ்வருடம் யாழ்குடாநாட்டில் 17384 வீடுகள்கட்டி முடிக்கப்படும் என யாழ் செயலக செயல்திட்ட இணைப்பாளர் தெரிவிக்கிறார்.

இவர் இவ்வீடுகள் அமைக்கும் திட்டம் பற்றி குறிப்பிடும் போது மாதாந்தம் 700 ரூபாவுக்குக் கீழ் வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 15000 ரூபா நன்கொடையாகவும், 701 ரூபா தொடக்கம் 1500 ரூபா வரை மாதாந்த சம்பளம் பெறும் குடும்பங்களுக்கு 15000 ரூபா நன்கொடையும் 15000 ரூபா கடனாகவும் வழங்கவும் இதுதவிர ஐயாயிரம் ரூபா மாதாந்த வருமானம் பெறும் 8164 குடும்பங்களுக்கு வங்கிக்கடன்கள் மூலம் வீடமைப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று கூறினார்.

இக்கடன் வழங்கும் திட்டம் பகுதிபகுதியாக வழங்கப்படும் என்றும் இதில் ஒவ்வொரு வீட்டுக்கும் நான்கு சட்டமாக உதவி வழங்கப்படும்.

இதில் ஊக்குவிப்புதொகையாக ஆரம்பத்தில் 1000 ரூபாவும் அத்திவாரம் இடுவதற்கு 1000 ரூபாவும் சுவர் அமைப்பதற்கு 4000 ரூபாவும் சுவர் பூசுவதற்கு 2000 ரூபாவும் நிலவேலை செய்வதற்கு 2000 ரூபாவும் கூரைவேலை செய்வதற்கு ஐயாயிரம் ரூபாவுமாக 15000 ரூபா வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். லோ)

# எட்டு வருடங்களின் பின்னர் திருமலையில் விளையாட்டுப் போட்டி

திருக்கோணமலை மெதடிஸ் பெண்கள் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த எட்டு வருடங்களின் பின்பு வெகு விமரிசையாக நடைபெற்றன.

இந்திய அமைதிப்படை மார்ச் 15 ஆம் திகதியுடன் வெளியேறியதைத் தொடர்ந்து மெதடிஸ்ற்கல்லூரியின் அதிபர் திருமதி. ம. சோமசுந்தரமும் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களும் விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்த வேண்டுமென முடிவு செய்து அதற்கான ஆயத்தங்களில் இறங்கினர்.

மார்ச் 13 ஆம் திகதியே அமைதிப்படை வெளியேறியதும் மிகவும் அமைதியானதொரு சூழ்நிலையில் சிறப்பாக விளையாட்டுப் போட்டிகள் நடந்தேறின.

இவ் விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராக திருக்கோணமலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. தியாகராசா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நடன அசைவுகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கண்காட்சியும், பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பும், விநோத உடைப் போட்டியும் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்த அம்சங்களாக இருந்தன. (28)


யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 4.40 4.45 7.00
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


## கொலம்பியாவில் கடத்தல்காரர் கொலைப் பயமுறுத்தல்

(பொகொட்டா)

கொலம்பியாவிலுள்ள செய்திப் பத்திரிகைகள் வெளியிடும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்களைக் கொலை செய்யப்போவதாக கொர்ககெயின் கடத்தல்காரர் பயமுறுத்தியதைத் தொடர்ந்து, சென்ற திங்கள் முதல் தமது நிறுவனம் வெளியிடும் பத்திரிகைகளில் ஆசிரியத் தலையங்கம் எழுதுவதில்லை என்று அவர்கள் தீர்மானித்துள்ளார்கள்!

போதைவஸ்து கடத்தலுக்கு எதிராகத் தீவிரமாக எல் எஸ் பெக்ரோடர் பத்திரிகைமூலம் பிரசாரத்தை மேற்கொண்டு வந்த மேற்படி பத்திரிகை உரிமையாளர்களான கனோ குடும்பத்தைக் கொலை செய்யப் போவதாக கடத்தல்காரர் சென்ற சனியன்று எச்சரித்துள்ளனர். அதேவேளை கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்கும்வரை தாம் ஆசிரியத் தலையங்கம் எழுதப் போவதில்லை என்று பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளனர்.

போதைவஸ்து கடத்தல்காரர் மீது நடவடிக்கை எடுக்கும் நீதிபதிகளைத் தாம் கொல்லப்போவதாகவும், 5,000 கிலோ (11.000 றாத்தல் எடையுள்ள குண்டைத் தாம் நகரத்தின் மத்தியில் வெடிக்க வைக்கப் போவதாகவும் கடத்தல்காரர் பயமுறுத்தல் செய்துள்ளனர்.

## முள்ளியவளையில் உண்ணாவிரதம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை கிராமத்தில் அன்னை பூபதி-கணபதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக உண்ணாவிரதம் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கடந்த 27-ம் திகதி மேற்படி கிராமத்தில் பாடசாலை மாணவர்களினாலும், பொதுமக்களாலும், அன்னை பூபதி, கணபதிப்பிள்ளையின் திரு உருவப்படத்தை ஊர்வலமாக எடுத்து வந்து முள்ளியவளை சந்தை முன் அமைக்கப்பட்ட மேடையில் வைத்து அஞ்சலி செய்து வருவதுடன், உண்ணா விரதமும் மேற்கொள்ளப்படுகிறது. இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முள்ளியவளை அன்னையர் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்.


புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

பலசரக்குச் சாமான்களும் பொலித்தீன் வகைகளும் தேவையான அளவில் மலிவாகப் பெற்றுக் கொள்ள

குகனேஸ்வரி ஸ்ரோர்ஸ்

பசார்வீதி, பெரியகடை, மன்னார்,

(B.547)


## மாட்டு வண்டில் ரயிலுடன் மோதியது

(வவுனியா)

பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் உள்ளரயில் பாதையில் மாட்டுவண்டில் ஒன்று யாழ்தேவியுடன் மோதியதில் அந்த வண்டியின் பாடுகள் மயிரிழையில் உயிர் தப்பின.

வண்டிச்சாரதிவண்டிலை விட்டு கடைக்குப் போயிருந்த போது ரயில் சத்தம் கேட்கவே மாடுகள் வெருண்டு ரயில் பாதைக்குஓடி வந்ததால்இந்த விபத்து ஏற்பட்டது.

## சிரமதானம்

(சம்மாந்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சம்மாந்துறைப் பிரதேச பொறுப்பாளர் தோழர் நிதி, தோழர் நீலன் தலைமையில் வீரமுனை ஸ்ரீசிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 30-03-90ல் மாபெரும் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இச்சிரமதானத்தின் போது பொதுமக்கள் ஐநூறுபேர் அளவில் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறையில் பரீட்சை சீராக நடைபெறுகின்றது

(சம்மாந்துறை)

தற்பொழுது நடைபெறும் க. பொ. த (சா. தரப் பரீட்சையை மிகவும் நேர்மையான, பாதுகாப்பான முறையில் சீராக நடைபெற தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் ஒத்துழைப்பும், பாதுகாப்பும் வழங்குகின்றனர். மேற்படி பரீட்சைத் திணைக்களத்தினால் நடைபெறும் இப் பரீட்சையின் போது ஆள் மாறாட்டம். மற்றும் பரீட்சை விதிகளை மீறி நடந்து கொள்வோரைக் கண்டுபிடிக்கும் பணியில் சம்மாந்துறைப் பொறுப்பாளர் தோழர் நிதி அவர்கள் தலைமையில் அடிக்கடி பரீட்சை மண்டபங்கள்சோதனையிடப்படுவதால் இது வரையில்லாதவாறு மிகவும் நேர்மையான முறையில் பரீட்சார்த்திகள் தடையின்றிப் பரீட்சையை எழுதுகின்றனர்.


புத்தாண்டே வருக!
எங்கள் ஈழம் பொலிவுற!

சிறந்த
கலர், கறுப்பு, வெள்ளை
புகைப்படங்களுக்கு
சிறந்த இடம்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

ருகுணாஸ் ட்ரேடிங்
284, ஆஸ்பத்திரி வீதி,


## வேலணையில் கவிதைப் போட்டிகள்

(வேலணை)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் புத்தாண்டையொட்டி கவிதைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இக் கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் மாவட்ட ரீதியில் நடைபெறுகின்ற கவிதைப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு அந்தப் போட்டியில் பங்கு பற்றுவார்கள்.

அதில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன. ஏற்கனவே உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் பரிசுகள் கிடைக்கவுள்ளன.

இதன் பிரகாரம் 4ஆம்திகதி புதன்கிழமை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உதவி அரசாங்க அதிபர்

கலந்து கொண்டனர்.


அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## சுதா ரேட்ஸ்

பெரிய கடை,
மன்னார்.

(B / 543)



## பிரபா போட்டோ

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்:

(B/ 586)



284, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-569)


புதன்கிழமை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் கவிதைப் போட்டி நடைபெற்றன.


### அலுமினிய தொழிற்சாலை தொழில் நுட்பவியலாளர்

மேற்படி பதவிக்கு அலுமினியத் தொழில் நுட்பத் துறையில் தகைமையும், அனுபவமும் பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி, மற்றும் தராதர, அனுபவ விபரங் களுடன் 15- 4- 1990க்கோ அதற்கு முன் பாகவோ கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பங் களைச் சமர்ப்பிக்கும்படி தகுதியுள்ளவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விளம்பர இலக்கம்: 006

**C/o ஈழநாதம்**
**வைமன் வீதி'**
**யாழ்ப்பாணம்.**

(B/595)


வீரவேங்கை மேஜர்

## காண்டீபனின்

## 31ம் நாள் நினைவஞ்சலி



தம்பி! உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

## நியூ அசோகன்ஸ்

நவீன சந்தை,
யாழ்ப்பாணம். R/82

மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல்

### யாழ்ப்பாண மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர்மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|
| 1. | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை (15-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | | |
| | 31-3-83 வரை அடகு வைத்தவர்கள் | 06-04-1990 | வெள்ளி |
| | 31-3-83க்கு பின்பு அடகு வைத்தவர்கள் | 07-04-1990 | சனி |
| 2. | யாழ். பிரதான வீதிக் கிளை புங்குடுதீவுக் கிளை (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07-04-1090 | சனி |
| 3. | யாழ். கன்னாதிட்டி கிளை சங்கானைக் கிளை ((12-10-1998 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07-04-1990 | சனி |
| 4, | யாழ். நவீன சந்தைக் கிளை (12-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06-04-1990 | வெள்ளி |
| 5. | சாவகச்சேரிக் கிளை பளைக் கிளை (15-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06-04-1990 | வெள்ளி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8. 30 மணிதொடக்கம் நண்பகல் 1, 00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந்தந்து நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

-பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

B: 594

# எஸ்தோனியாவும் மீறினால் லித்வேனியாவின் கதிதான்!

## - கொப்பர்சேவ் எச்சரிக்கை

(மொஸ்கோ)

சோவியத் அரசியல் சாசனத்தை மறுத்து அதற்கு முரணாக எஸ்தோனியா நடந்தால் லித்வேனியாவில் நடப்பவை தான் இங்கும் இடம் பெறும் என்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் எச்சரிக்கை செய்துள்ளார்.

ஜனாதிபதி கொர்பசேவ் லிஸ்தோனிய தலைவருக்கு தொலைபேசி மூலம் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளார். சோவியத் அரசியல் சாசன விதிகளை எஸ்தோனியா மீறுமேயானால் லித்வேனியாவில் விதித்தகட்டுப்பாடுகளே அதற்கும் ஏற்படும் என்று கொர்பச்சேவ்கூறியுள்ளார் இதற்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை எஸ்தோனியப் பாராளுமன்றம் சோவியத் அரசியல் சாசன விதிகளை எஸ்தோனியாவில் செல்லுபடியாகாது என்றும் எஸ்தோனியா சோவியத்தால் பிடிக்கப்பட்ட ஒரு பகுதி என்றும் இப்போது முழு சுதந்திரம் பெறுவதற்காக போராட்டம் நடத்தப் போகிறது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இதன்விளைவாகவே சோவியத் ஜனாதிபதி தொலைபேசி மூலம் எஸ்தோனிய தலைவரை எச்சரித்துள்ளார். ஆனால் எஸ்தோனியத் தலைவர் ஆனால்நூட்டன் கொர்பசேவ் தவறாக தமது தீர்மானத்தைப்புரிந்து கொண்டுள்ளார் என்றும் எஸ்தோனியா சோவியத் அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு உடன்பாடு ஏற்படும் வரை சோவியத் அரசின் அரசியல் சாசன மேலாதிக்கத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறோம் என்பது தான் எமது தீர்மானம் என்றும் குறிப்பிட்டார் அத்துடன் பேச்சு வார்த்தையை நடத்தும் வரை சோவியத் சட்டத்தை தாம் மீறப்போவதாக மிரட்டி மட்டும் வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை சோவியத் அரசு லித்வேனிய அரசுடன் அதிகார பூர்வமற்ற பேச்சு வார்த்தைகளை நடத்தியது. லித்வேனியாசார்பில் துணைப் பிரதமரும் சோவியத் சார்பில் பொலிட்பீரோ உறுப்பினர் அலெக்சாண்டர்யூகோபஸ் கலந்து கொண்டனர். ஆனால் பேச்சு வார்த்தை பற்றி இரு தரப்பினரும் கருத்துத் தெரிவிக்கவில்லை.

---

# ஆனந்த மார்க்க தொண்டர் கொலை

(கல்கத்தா)

மேற்கு வங்காளத்தில் கிராமமொன்றில் ஆனந்த மார்க்க மதப் பிரிவினருக்கும் கிராம வாசிகளுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரிழந்தனர்.

மேற்கு வங்காளத்தில் கிழக்குத் திசையில் அமைந்துள்ள சக்கா என்ற கிராமத்தில் காணி ஒன்று தொடர்பாக ஆனந்த மார்க்கத்தினருக்கும் கிர்ாமவாசிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டதாக மேற்கு வங்காள அரசின் பிரதம செயலாளர் ரி.சி. தத்தா தெரிவித்தார்.

ஆனந்த மார்க்க தொண்டர்கள் ஜீப் வாகனம் ஒன்றில் சென்று பிரச்சினைக்குரிய காணியைப் பலவந்தமாகச் சுவீகரிக்க வந்த போது இந்த மோதல் சம்பவம் நிகழ்ந்ததாம்.

மார்க்ஸிஸ்ட ஆட்சி நடைபெறும் மே. வங்காள அரசின் பிரதம செயலாளர், ஐந்து ஆனந்த மார்க்கத்தினர் இறந்துள்ளதாகவும், ஒருவர் பாரிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்தார் என்று பி.ரி ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

---

# சவூதி மன்னரது பேரீச்சம்பழம் யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு

(யாழ். முஸ்லிம் வட்டாரம்)

நோன்பு காலத்தை முன்னிட்டு யாழ். முஸ்லிம்களுக்கு பேரீச்சம்பழங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

முஸ்லிம் மக்களின் புனித நோன்பு காலத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்காக சவூதி அரேபிய மன்னர் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிய உயர்ரக பேரீச்சம்பழங்களில் ஒரு பகுதியினை கௌரவ வர்த்தக அமைச்சர் ஜனாப், ஏ. ஆர். எம் மன்சூர் அவர்கள் யாழ். ஜமாதே இஸ்லாமிய பயிற்சி மன்றத்துக்கு வழங்கியுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுச் சந்தையில் விலை கொடுத்து வாங்க முடியாத உயர்ரக பேரீச்சம் பழங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல யாழ். ஜமாதே இஸ்லாமிய பயிற்சி மன்றத்தினரால் சமமாகப் பங்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் வாழும் எல்லா முஸ்லிம்களாலும் பெறமுடியாத இந்த உயர்ரக பேரீச்சம்பழங்கள் அவர்களின் புனித றம்ழான் மாதத்தில் வழங்கப்பட்டு வருவதை பெரும் வரப்பிரசாதமாக முஸ்லிம்கள் கருதுகின்றார்கள்.

யாழ். மாவட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கு சமபங்கீடு செய்த பின்னர் மிகுதியாக பேரீச்சம்பழங்கள் இருப்பின் அவற்றை பள்ளிவாசல்களில் நோன்பு திறப்பதற்காக வழங்கப்பட இருப்பதாக யாழ். ஜமாதே இஸ்லாமிய பயிற்சி மன்ற நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

---

# தலாய்லாமா தாய்லாந்து செல்வதற்குத் தடை!

(பாங்கொக்)

திபெத்திய மக்களின் ஆன்மீகத் தலைவரான தலாய்லாமா தாய்லாந்துக்கு வருவதற்கு அவ் அரசு அனுமதி மறுத்திருக்கிறது. தலாய்லாமாவை சீன அரசு எதிர்ப்பதே இதற்குக் காரணமாகும்.

திபெத்திய நெருக்கடிக்கு அவர் தான் காரணம் என்று சீன அரசு குற்றஞ்சாட்டி வருகிறது. அவர் வருவதற்குள்ள தடை நீடிக்கும் என்று தாய்லாந்தின் அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் தாய்லாந்தில் வெளியாகும் பத்திரிகைகள் அரசுக்கு கண்டனம் தெரிவித்து தமது கருத்துக்களை வெளியிட்டன. சீனாவின் எதிர்ப்புக் காரணமாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கூட தலாய்லாமா வருவதை அரசு அனுமதிக்கவில்லை. இப்போதும் அவரது வருகையை



தடுக்க சீன அரசு எல்லா வித நடவடிக்கையையும் மேற்கொள்ளும் என்றும் அப்பத்திரிகைகள் கூறுகின்றன.

அவர் மீதான தடையைப் பற்றி மக்களிடையே வாதப் பிரதி வாதங்கள் இடம்பெறுகின்றன. இதற்கு அரசதரப்பின் அதிகாரிகள் அவரை அனுமதித்தால் தாய்லாந்து சீன உறவு பாதிப்படையும் எனக் குறிப்பிட்டுள்ளார்

---

# தொலைபேசிக் கேபிள்கள்

---

# ஹொங்கொங் எதிர்காலத்திட்டம் சீனப்பாராளுமன்றம் அங்கீகாரம்

(பீக்கிங்)

ஹொங்கொங்கின் எதிர்காலத்திற்கான திட்டத்தை சீனப் பாராளுமன்றம் அங்கீகரித்து விட்டது.

1997ஆம் ஆண்டில் சீனாவிடம் ஹொங்கொங்கை பிரித்தானியா ஒப்படைக்கும். அதற்குப் பின்னர் சேமிப்பு சட்டத்தின் கீழ் 50 ஆண்டு காலத்திற்கு முதலாளித்துவ முறையும், தற்போதைய வாழ்க்கை முறையும் நீடிக்கும். ஆனால் சீன அரச தரப்பு என்று கருதும் எந்த வேலையையும் அனுமதிக்கப்படாது என்று பிரித்தானியா கூறியுள்ளது. அதாவது,

அரச தரப்பு என்று கருதும் வேலையை மேற்கொண்டால் அது சீனத் தலைமையின் கடும் போக்கை கூட்டுவதாக அமையும் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதே வேளை ஹொங்கொங்கில் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த சட்டத்தை திருத்த வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

---

# பாகிஸ்தான் பொய்ப்பிரசாரத்தை உடனே நிறுத்த வேண்டும்

## -இந்திய அதிகாரி

(டெல்லி)

பாகிஸ்தானை வசப்படுத்திக் கொண்ட காஷ்மீர் பகுதிக்குள் அகதிகள் வருவதாக கூறும் தவறான செய்திகளை வெளியிடுவதை பாகிஸ்தான் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும் என இந்தியா கேட்டுள்ளது.

மதவாதம், பயங்கரவாதம், கொள்ளை வெறி கலந்த பிரசாரத்தையும் ஆயுத விநியோகத்தையும் பாகிஸ்தான அளிப்பதோடு, தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்து ஆயுதங்களையும் ஆட்களையும் அனுப்பி வருகிறது. இது பகிஸ்தானுக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துவதோடு இந்தப் பகுதியில் அமைதியையும் ஒருமைப்பாட்டையும் வெகுவாகப் பாதிக்கும் என அரச அதிகாரி செய்தியாளர்களுக்குக் கூறினார். மேலும் அவர் கூறுகையில் அகதிகள் என்ற பெயரால் பாகிஸ்தானின் பெரும் தொகை பணம் திரட்டப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

---

# வெங்கட்ராமன் தட்சர் லண்டனில் சந்திப்பு

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மாக்கிரெட் தட்சருடன் இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் நேற்று லண்டனில் அரைமணி நேரம் பேச்சு நடத்தினார். இருதரப்பு உறவுகளுக்கு புத்துயிர் ஊட்டுவது, ஐரோப்பாவின் நடப்பு நிலமைகள் ஆகியன தொடர்பாக இரு தலைவர்களும் விவாதித்தார்கள். தெற்காசிய நிலைமைகள் பற்றியும் இப்பேச்சுக்களில் இடம் பெற்றன. பின்னர் ஜனாதிபதியை சிறப்பிக்கும் வகையில் திருமதி தட்சர் விருந்தளித்தார். காமன்வெல்த்தலைமைச் செயலாளர் இராஜிபப் பிரதிநிதிகளுடனும் ஜனாதிபதி பேச்சுக்கள் நடாத்தினார்.

---

# காத்தான்குடி உ. அ. அ. பிரிவில் உணவுமுத்திரைகள் விநியோகம்

(காத்தான்குடி)

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபா அலுவலக பிரிவில் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் இம்மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றன.

ஜனாப். ஏ. ஆதம்லெப்பை ஜே. பி. உரையாற்றுகையில் "ஜனாதிபதி அவாகளின் விசேஷ பணிப்புரையை கடமையுணர்வோடு கவனத்திற்கு எடுத்து குறிப்பிட்ட தினத்தில் உணவு முத்திரைகளை இப்பகுதி மக்களுக்கு விநியோ

---

# கையெழுத்துப் பிரதி வெளியீடு

(புங்குடுதீவு)

இன்று எம்மாணவர்களின் திறமைகள் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். முக்கியமாக கலை இலக்கிய துறையில் மாணவர்கள் சாதனை நிலை நாட்டவேண்டும் இதற்கு எமது பூரண ஒத்துழைப்பு என்றும் இருக்கும். இன்று அவர்கள் இலக்கிய துறையில் சஞ்சிகை வெளியிட்டிருப்பது அவர்களின் இலக்கிய ஆர்வத்தையும் முயற்சியையும் வெளிக்காட்டுகின்றது"

இவ்வாறு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் வித்தியாலய மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட 'விதைகள்' எனும் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய கொத்தணி அதிபர் திரு. ஏ. சி நல்லையா கூறினார். அவர் மேலும் பேசுகையில் "கையெழுத்து பிரதியாக வெளிபிடப்பட்டுள்ள இந்த நூல் விரைவில் 'அச்சுப்பிரதியாக' வெளிவர வேண்டும் என விருப்பம் தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து திரு. பூராசா (அதிபர்) ந தர்மபாலன்(அதிபர்) திருமதி புற்கலை (ஆசிரியை) ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

மேற்படி மன்ற செயலாளர் செல்வி தி. பொற்கொடி வரவேற்புரை நிகழ்த்தினார். மன்றத்தலைவர் மோகனகுமாரி நன்றியுரை வழங்கினார்.

இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்சியும் இடம் பெற்றது. (22)

---

# நயினாதீவில் கருத்தரங்கு

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அமைப்பான மக்கள் முன்னணியின் கருத்தரங் கொன்றுநயினாதீவுமகா வித்தியாலயத்தில் நடை பெற்றது

இக்கருத்தரங்கில்விடுதலைப்புலிகளின் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு ஜேம்ஸ். தீவுப்பகுதி அரசியல்பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ, தீவுப் பகுதி அரசியல் முக்கியஸ்தர் திரு. நரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (15)

---

# பாலர் பாடசாலை ஆசிரியை இல்லை

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு

வாங்க முடியாத உயர்ரக பேரீச்சம் பழங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல முஸ்லிம் குடும்பங்களுக்கும் யாழ். ஜமாதே இஸ்லாமிய பயிற்சி மன்ற நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (52)

## ஜே.வி.பி. யின் பெயரால் மோசடி செய்ய முற்பட்ட பெண் கைது

(கொழும்பு)

புகையிரத ஓட்டுநரின் மகளான இளம் பெண் ஒருவர் தான் ஜே. வி. பியின் பிரதிநிதி என்று கூறி ரூ 25,000/- பணத்தையும், ஐந்து பவுணையும் தெமட்டக்கொடவிலுள்ள முஸ்லிம் வியாபாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள விருந்த சமயம் பொலிஸார் விரித்த வலையில் முறையாகச் சிக்கிக் கொண்டார்.

பொறளை சகல புனிதர்கள் கோயில் வலப்பக்கத்திலுள்ள புத்தகத்தட்டில் மார்ச் 26 ஆம் திகதி காலை 9.30 அளவில் ரூபா 25,000/- த்தையும், 5 பவுணையும் வைக்கும் படி முஸ்லிம் வியாபாரிக்கு எழுதியுள்ளார். தனது கோரிக்கையை நிறைவேற்றாவிடில் கொட்டிகாவத்தை சகாதிஸ்ஸதேரோ, பியதாஸா முதலாளி, றிச்சேட் டி சொய்ஸா ஆகியோரைக் கொலை செய்தது போல் முஸ்லிம் வியாபாரியையும் கொலைசெய்யப் போவதாக கடிதத்தில் பயமுறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரகாலத்தில் வியாபாரி பணத்தையும் பவுணையும் வைத்துள்ளார், இளம் பெண் இவற்றை எடுக்கச்சென்றுள்ளார். ஆனால் தெமட்டக்கொடவைச் சேர்ந்த பொலிஸார் மாறுவேடத்திலிருந்து இந்தக் கொடுக்கல்-வாங்கலை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது பெண்ணுக்குத் தெரியாது. பணமும், பவுணும் அடங்கிய பொட்டலத்தை பெண் கையிலெடுத்ததும் பொலிஸார் அவரைப் பிடித்துக் கொண்டனர்.

இப் பெண் திருக்கோணமலைப் பகுதியில் ஜே. வி. பி இயக்கத்தைச் சேர்ந்தவராயிருக்கலாம் என்பது குறித்து பொலிஸ் விசாரணை மேற்கொண்டுள்ளது.

## மூன்றாவது ஆண்டுவிழா

(கல்லாறு)

பெரிய கல்லாறு ஸ்ரீ சத்திய சாயிபாபா சமிதியின் 3ஆவது ஆண்டு விழா பெரிய கல்லாறு மெதடிஸ்ற் மிஷன் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. கல்முனை ஸ்ரீ சத்தியசாயிபாபா சமித்தியின் பஜனை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. சுப்பிரபாதமும் நகர சங்கீர்த்தனமும் நாராயண சேவையும் இவ் விழாவின் முக்கிய அம்சங்களாகும்.

கிழக்குப் பிராந்திய சாயிபாபா சமித்தி இணைப்பாளர் டொக்டர் ஜெகநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

## தொலைபேசிக் கேபிள்கள் நிலத்துக்கடியில் பழுது

(கல்லாறு - களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி, கல்லாறு, மருதமுனை, பாண்டிருப்பு, போன்ற கல்முனை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள சில தொலைபேசிகள் ஊடாக செய்திகளைத் தெளிவாக பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இதே தொலைபேசிகள் மூலம் செய்திகளைத் தெளிவாக கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

செய்திகளைப் பெறும் போது ஒரே இரைச்சலாக இருப்பதால் மறுமுனையிலிருந்து கதைப்பது தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாதிருக்கிறது. இது கடந்த பல வாரங்களாக இருந்து வருவதாக தொலைபேசி பாவனையாளர்களே தெரிவித்தனர்.

இது தொடர்பாக கல்முனைப் பரிவர்த்தன நிலைய மாவட்ட பரிசோதகர் திரு. த. குகேந்திரனை வினவிய போது, ''நிலத்துக்கடியிலான தொலைபேசி 'கேபிள்' இணைப்புக்கள் பத்துவருட பழமை வாய்ந்ததென்றும், மருதமுனைக்கும் பாண்டிருப்பிற்கும் இடையேயுள்ள நிலத்துக்கடியிலான 'கேபிள்கள்' பழுதடைந்திருப்பதாலேயே இத்தகைய தொலைபேசி கோளாறுகள் ஏற்படுகின்றதென்றும், இதைத் திருத்துவதற்கு கொழும்பில் இருந்து தேவையான கேபிள்களையும் உபகரணங்களையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என்றும் கூறினார். (45)

ஊழியர் அசமந்தப் போக்கினால்

## வவுனியா ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் பெரும் அவதி

(வவுனியா)

வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் நோயாளர்களை வண்டிகளில் எடுத்துச் செல்லும் வேலைகளை பொலிஸாரே மேற்கொண்டு வருகின்றனர்.

ஊழியர்கள் பற்றாக் குறையினால் அவசியமான நேரங்களில் பொலிஸார் மேற்கொள்ளும் இந்தவேலைகளைபொது மக்கள் பாராட்டியுள்ளனர்.

இதேசமயம் வெளிநோயாளர் பிரிவில் இருக்கும் ஊழியர்கள் இங்கு வரும் நோயாளர்களைக் கண்டும் காணாதது போல இருப்பதாகவும், நோயாளிகள் தமது தேவைகளைக்கேட்டால் அங்கேஇங்கே என்று சாட்டுச் சொல்வதாகவும் பொதுமக்கள் புகார்தெரிவிக்கின்றனர்.

இதனால் நோயாளிகள் விரைவாக சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதில்லை எனவும் புகார்கள் கூறப்படுகின்றன.

## யாழ்.கல்வி திணைக்களத்திற்கு புதிய கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு புதியதொரு கட்டிடம் மிக விரைவில் அமைக்கப்பட உள்ளது. இக்கட்டிடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் யாவும் விரைவாக நடந்து வருவதாக தெரியவருகிறது.

ஆறு மாதங்களுக்கு முன் கல்வி அமைச்சால் யாழ்ப்பாண கல்வி திணைக்களத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி கல்வித் திணைக்களத்தை வந்தடைந்துள்ளதை தொடர்ந்து இக்கட்டிடம் அமைப்பதற்கான தீர்மானம் செய்யப்பட்டதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். (லோ

முத்திரைகள் இம்மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றன.

காத்தான்குடி 6 ஆம் குறிச்சி கிராம சேவையாளர் பிரிவில் வாழும் மக்களுக்கு உணவு முத்திரைகளை வழங்கும் வைபவரீதியான நிகழ்ச்சி கிராமசேவகர் ஜனாப் ஏ. எல். எம். இபுறாலெப்பை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் கலந்து கொண்ட காத்தான்குடி 6 ஆம் குறிச்சி ஜனசவிய அபிவிருத்திக் குழுத்தலைவர்சிறப்பித் தார்.

எடுத்து குறிப்பிட்ட தினத்தில் உணவு முத்திரைகளை இப்பகுதி மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்த எமது கிராம சேவகரின் முயற்சியை பொதுமக்கள் சார்பில் நான் பாராட்டுகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் புதிய காத்தான்குடி சிற்றூர்க்கிளைத் தலைவர் ஜனாப். எம் ஐ. ரஹ்மத்துல்லாஹ் (பூ வி) அவர்களும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உணவு முத்திரைகளை வழங்கிச்

## ஆசிரியை இல்லை

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு பாலர் பாடசாலையில் நீண்ட காலமாகப் பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியை நியமிக்கப் படாமையினால், இப்பகுதி சிறுவர்களின் ஆரம்பக் கல்வி முழுமையாக பாதிப்படைந்த நிலையிலுள்ளது

கடந்த காலத்தில் இப்பாடசாலையில் பணிபுரிந்து வந்த பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியை 1987ஆம் ஆண்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் நிமித்தம் குடிபெயர்ந்து விட்டமை குறிப்பிடத் தக்கது.

## ஈழம் என்னும் இடப்பெயர் பூநகரியில் கண்டு பிடிப்பு

(ப. புஷ்பரட்ணம், விரிவுரையாளர்)

இலங்கை ஆதிகாலம் தொட்டு மத்தியகாலம் வரை 'ஈழம்' என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டதை சங்க இலக்கியத்திலும் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், பிற்கால சோழ, பாண்டியச் சாசனங்களிலும காணமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப் பாலையில் ஈழத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கை வரலாற்று மூலங்கள் எதிலும் இலங்கை ஈழம் என்ற பெயர் கொண்டழைக்கப்பட்டதிற்கான சான்றுகள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. இதனால் ஆதியில் ஈழம் என்ற நாடு இலங்கையைத்தான் குறித்ததாஎன்பதையிட்டு வரலாற்றாசிரியர்கள் இடையே முரணபட்ட கருத்துக்கள் நிலவிவருகின்றன.

ஆனால் பூநகரியில் உள்ள ஒரு பிரதேசம பாரம்பரியமாக 'ஈழஊர்' என அழைக்கப்பட்டு வந்ததை ஓலைச் சுவடிகளில் இருந்தும், பழைய ஆவணங்களில் இருந்தும் அறியமுடிகிறது. இவ்விடம் பாண்டியரோடு தொடர்புடைய பூநகரியில் உள்ள வீரபாண்டியன் முனைக்கும் சோழரோடு தொடர்புடைய பல்லவராயன் கட்டுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தை குறிப்பதாகும்.

தற்போது வேரவில் என அழைக்கப்படும் கிராமம்முன்பு ஈழ ஊர் என அழைக்கப் பட்டதற்கும் ஆதாரமுண்டு. இதனால் ஆதியில் இவ் ஈழ ஊர் பூநகரியின் பரந்த பிரதேசத்தைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும். 11ஆம் நூற்றாண்டு சோழக் கல்வெட்டுக்களில் இலங்கை முரட்டொழில் சிங்கள ஈழ மண்டலம் என வேறுபடுத்திக் கூறப்படுகிறது.

இது சோழர் ஆதிக்கத்தை அடிக்கடி எதிர்த்து வந்த சிங்கள அரசையும் சோழருக்கு சார்பாக இருந்த தமிழ் பிரதேசத்தையும் குறிக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இதுபற்றி எதிர் கால ஆய்வுகள் ஈழத் தமிழர் வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்கலாம்.

## தமிழ்த்தின போட்டி

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சிகோட்டக்கல்வி பிரிவுப்பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் தினப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொத்தணி மட்டத்தில் முதலிடங்களைப் பெற்றமாணவ, மாணவிகள் இப் போட்டியில் பங்கு பெற்றுவார்கள். (36)

## அடையாள உண்ணாவிரதம்

அன்னை பூபதியின் நினைவாக அரியாலைநாவலடி வாழ் மக்களால் ஒருநாள் உண்ணாவிரதம்அனுஷ்டிக்கப் பட்டது. முடிவில் கூட்டமும் நடந்தது.

உதயவேளையில்
உலகினைத் தரிசிக்க

**ஈழநாதம்**

**மக்கள் தினசரியின்**

திருக்கோணமலை விற்பனையாளர்

**மையூரன்ஸ் புக் சென்டர்**

101 A, வித்தியாலயம் வீதி,
திருக்கோணமலை.

உங்கள் பிரதியை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.



**கம்பியூட்டர் கல்வி**

Diploma in Data Processing and
Computer Programming in
BASIC Language

ஆரம்பம்: 04 April, 1990 10-30 a. m.
(திங்கள், புதன், வெள்ளி)
07 April, 1990 11-00 a. m.
(சனி, ஞாயிறு)

❋ **LOTUS 1-2-3**
ஆரம்பம்: 04 April 1990 9-00 a. m.

❋ **WORD PROCESSING**
ஆரம்பம்: 07 April 1990 9-30 a. m.

❋ **COBOL**
ஆரம்பம்: 12 April 1990

G. C. E. (O/L) படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, POWER HOUSE ROAD,
2nd Lane, JAFFNA.

(B/593)


# சென்ஜோன்ஸ் - யாழ். இந்து கிரிக்கெட் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். இந்துக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி இம்மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாளர்கள் செய்ய உள்ளனர்.

இரு கல்லூரிகளிலும் சிறந்த துடுப்பாட்டக்காரர்களும் சிறந்த பந்து வீச்சாளர்களும் இருக்கிறார்கள் எனவும், இப்போட்டி சிறந்த விருந்தாக அமையுமெனவும்கிரிக்கெட்ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யாழ். இந்துக்கல்லூரி வீரர் செல்வன் ஜெயராஜ் 121 ஓட்டங்களை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிராக அடித்துள்ளார். சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் செல்வன் எஸ். சுரேன்குமார் மாபெரும் யாழ். மத்திய கல்லூரி சென். ஜோன்ஸ்கல்லூரி கிரிக்கெட் போட்டியில் 145 ஓட்டங்களை எடுத்து ஒரு சாதனையை முறியடித்த பெருமை இவருக்கே உரியது. (42)


**பனை அபிவிருத்திச் சபை**

**பனைவளத் தொழிற்பாட்டு கண்காட்சி**

எதிர்வரும் மே மாதத் தொடக்கத்தில் யாழ். நகரில் ''பனைவளத் தொழிற்பாட்டுக் கண்காட்சி'' ஒன்று நடைபெறவுள்ளது. பனையின் சமூக, பொருளாதார முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதாக இருக்கும் இக்கண்காட்சியில் கலந்து கொள்ள விரும்புகின்ற, பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு கைப்பணி, மற்றும் கைத்தொழிலில் ஈடுபட்டுவரும் ஸ்தாபனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள், தனியார் ஆகியோர் பொதுமுகாமையாளர் பனை அபிவிருத்திச் சபை தேசிய வீடமைப்புச் செயலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தயவுசெய்து உடன் தொடர்புகொள்ளவும.

தலைவர்
B/588 பனை அபிவிருத்திச் சபை.



காலம் மாறிப்போகும் அன்னையே
உன் மரணம் என்றும்
எம்மைவிட்டு மாறாது என எமது
அஞ்சலியை செலுத்துகின்றோம்




100, 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில்

# யாழ். மாவட்ட விளையாட்டில் சோதிலிங்கம் புதிய சாதனை

(யாழ் விளையாட்டு நிருபர்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் யாழ் மாவட்டத்தில் 100 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் நிலைநாட்டப்பட்ட சாதனையை வீரர் ஆர். சோதிலிங்கம் இம்முறை முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

வீரர் சோதிலிங்கம் 100 மீற்றர் தூரத்தை 11. 1 வினாடிகளில் ஓடி 14 வருடங்களுக்கு முன்னர் யாழ். பொலிஸ் விளையாட்டுக் கழக வீரர் மிஸ்கின் ஏற்படுத்திய சாதனையை முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

இவர் 200 மீற்றர் தூரத்தையும் 22. 3 வினாடியில ஓடி 1983ஆம் ஆண்டு ஏ. ஜெயக்குமாரினால் ஏற்படுத்தப்பட்ட சாதனையை முறியடித்து ஒரு புதிய சாதனையை நிலைநாட்டினார்.

வீரா ஆர். சோதிலிங்கம் 1988ஆம் ஆண்டு கொழும்பில் தேசிய ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் 100, 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கலந்து தனது வேகமாய் ஓடும் திறமையைக் காட்டி விருதுகள் பெற்றிருக்கிறார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் யாழ். மாவட்டமெய்வலலுனர் பயிற்சியாளர் கே. டபிள்யூ விமலராஜாவிடம் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (42)


**JAFFNA ENGLISH ACADEMY**

**ENGLISH SHORT STORY / POETRY COMPETITIONS**

Open to only Sri Lankans UNDER 30 years. Contributions should be neatly and clearly typed, double-space, on one side of the paper only. Poems should not exceed one foolscap sheet, and short stories three. All entries should reach us on or before 31-04-1990. Send your contributions with your full name, address and the date of your birth to the Director of Studies, Jaffna English Academy, No. 9, Rakka Lane, Chundikuli, Jaffna. Even if the Author opts to use his/her initials or pseudonym, his/her name should be given. All works submitted should be original and unpublished, and are accepted on the basis that they will not be published in any journal or newspaper.

| | | |
|---|---|---|
| 1st Prize | Rs. | 1000/- |
| 2nd Prize | Rs. | 500/- |
| 3rd Prize | Rs. | 250/- |

There will be six prizes altogether. Three for short stories and three for poetry.

No correspondence regarding competritions will be entertained.

(R,73)



அனைவருக்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

மலர் ஸ்ரோர்ஸ்


## முதலாம் இடத்தை பெற்றார்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பகுதி பாடசாலைகளுக்கிடையே விளையாட்டுப் போட்டியில் 19 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் ஆகிய மூன்று போட்டிகளிலும் ஹாட்லிக கல்லூரி மாணவன் செல்வன் எஸ். குலஇந்திரன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (25)

## பிராந்திய காரியாலயம்

(கரவெட்டி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சிப் பிராந்தியக் காரியாலயம் பருத்தித்துறையில் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இதன் பொறுப்பாளராக திரு. தீபன் நியமிக்கப்பட்டு செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஹாட்லிக் கல்லூரி வெற்றிபெற்றது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய கிரிக்கெட் அணிக்குமான கிரிக்கெட் போட்டியொன்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. பி. பாலசிங்கம், வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். ஏகாம்பரநாதன் ஆகியோர் போட்டியை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

ஹாட்லிக்கல்லூரி 1 இனிங்ஸ் 17 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. ஹாட்லிக்கல்லூரி அணி

## குகன் ஸ்ருடியோ

மீண்டும் பழைய இடத்தில்

இம்மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் குகன் ஸ்ருடியோ பழைய இடத்தில் (துறை முகத்திற்கு அண்மையில்) இயங்குவதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பிரதான வீதி,
பருத்தித்துறை. குகன்.

(R/78)

அன்னை பூபதிக்கு எமது உளம் நிறைந்த அஞ்சலிகள்



உங்கள் மங்கள வைபவங்களை நவீன மிக்ஸர் மூலமாக கை தேர்ந்தவர்களால் வீடியோவில் படம்பிடித்துக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## யூட் போட்டோ

வங்களாவடி, வேலணை.

## வின்சன் ஸ்ருடியோ

ஊர்காவற்றறை வீதி, புளியங்கூடல்.

(B/591)



# N. M. T. பிறதர்ஸ்

## தளபாட வியாபாரம்

கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(B/530)

## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி!



ஆயுத முனையிலே பல உயிர்கள் மாண்டதம்மா
ஆனால் அதனை எண்ண முடியவில்லை
அகிம்சை ரீதியிலே இரு உயிர்கள் கருகியதம்மா
அதைத் தான் எம்மால்மறக்க முடியவில்லை
அம்மா உனது இலட்சியம் வெல்க.

# யாழ்ப்பாணம் அங்காடிவியாபாரிகள்

வர்த்தக சங்கம். (R/79)

## மலர் ஸ்ரோர்ஸ்

மன்னார்.

(B/546)

தனா.

ஹாட்லிக்கல்லூரி1 இனிங்ஸ் 17 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. ஹாட்லிக்கல்லூரிஅணியின் தலைவரான செல்வன் எஸ். குலஇந்திரன் சிறந்த ஆட்டக்காரருக்குரிய வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டார். (25)



வடமராட்சி மக்கள் சார்பாக
வடமராட்சி வடக்கு மேற்கு
தனியார் பேருந்து இயக்குனர் சங்கம்,
வல்வெட்டித்துறை.

## அன்னை பூபதிக்கு

ஆவியைப் பணயம் வைத்தே
அருந் தமிழர் மீட்க
பூமியும் நடுங்கி யேங்கப்
புரிந்த நற்றவத்தால் நன்று
காவியம் படைத்த எங்கள் அம்மா
களங்கமில்லாப் பூபதியே
மேவிடும் உந்தன் நாமம்
மேதினி நிலைக்கு மட்டும்!

(R/80)

### சிந்தனைக்கு

ஓராயிர வருட மோய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ.
- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 06 - 04 - 90

# விழிப்புடனிருக்க வேண்டும்!

திருக்கோணமலை நகரில் ரயில் நிலையத்துக்கு அருகில் தமிழ் மக்களின் குடியிருப்பில் மூன்று வீடுகள் தீக்கிரையாகியிருக்கின்றன.

கடந்த புதன்கிழமை முற்பகல் பத்தரை மணியளவில் இப்பகுதிக்குள் நுழைந்த விஷமிகள் இந்த வீடுகளுக்குத் தீ வைத்திருக்கின்றனர்.

கொழும்பில் இரண்டாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய சமயத்தில் இச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

''சிக்கல் வாய்ந்த வடக்கு கிழக்கு பிரச்சினைகளை சகலரும் திருப்தியடையக்கூடிய முறையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் தீர்க்க வேண்டும். பொது மக்களது மறுக்க முடியாத அபிலாஷைகளுக்குத் தடையாக நாம் செயற்படக் கூடாது''

இப்படி ஜனாதிபதி பிரேமதாசா பாராளுமன்றத்தில் உரையாற்றிய சமயத்தில் திருக்கோணமலையில் தமிழ் மக்களின் மூன்று வீடுகள் தீ வைத்து நீறாக்கப்பட்டிருக்கின்றன.

இது ஒரு சாதாரண சம்பவமாக இருக்க முடியாது. விஷமிகளின் செயல் என்றுகூடக் கூறிவிட முடியாது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நல்ல அமைதியான சூழ்நிலையும் இனப்பிரச்சினையில் ஜனாதிபதி பிரேமதாசாவின் அணுகுமுறையும் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் சுமுகமான பேச்சுவார்த்தைகளும் சில தீய சக்திகளுக்குப் பிடிக்கவில்லையென்பது பகிரங்க இரகசியம்.

இன்றுள்ள அமைதி நீடிக்குமா? என்ற கேள்வி பல இடங்களிலும் கேட்கப்படுவதற்கும் இங்கு வரும் வெளிநாட்டு நிருபர்களில் சிலர் இதே கேள்வியைக் கேட்பதும் சிந்திக்க வேண்டியவை.

கல்முனையில் ஒரு வாழைப்பழக் கடையில் தற்செயலாக ஏற்பட்ட தீயினால் சில கடைகள் எரிந்ததை ஆயுதந் தாங்கிய சில இளைஞர்கள் முஸ்லிம் கடைகளுக்குத் தீ வைத்ததாக ஒரு பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடுகள் செய்திகள் வெளியிட்ட விஷயமும் வெறும் செய்தி மாத்திரம் அல்ல;

வெளிநாட்டு, உள்நாட்டுப் புலனாய்வுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டில் இனப் பிரச்சினை தீர்ந்து

# விடுதலைப் புலிகள் அரசியல் இராணுவசக்தியாகவளர்ந்துள்ளனர்

தமிழ்பேசும் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக பெருமாளின் தலைமையில் ஒரு ஒழுங்கீனமான நிர்வாகத்தையும், தமிழ் தேசிய இராணுவம் என்ற பெயரில் கூலிப் படையொன்றை முன்னைநாள் இந்திய நிர்வாகம் ஏற்படுத்திய கேலிக்கூத்து, இந்திய இராணுவம் இலங்கையை விட்டு இறுதியாக வெளியேற முன் பெருமாளின் கூலிப்படைகள் பெருமளவில் ஒரிஸாவுக்கு ஓடியதும், பெருமாளே எங்கென்று தெரியாத இடத்துக்குத் தப்பி ஓடியதும் ஒரு விசனமான முடிவாகும். பரிகசிக்கத்தக்க முறையில் தன்னிச்சையாக சுதந்திரப் பிரகடனம் செய்தமை துன்பகரமான நிகழ்வைப் பெரிதாக்கியதோடு, மக்கள் சுயநிர்ணயத்துக்காகப் போராடியதை சிரிப்புக்கிடமாக்கி, இறுதியில் பெருமாளின் மாகாண நிர்வாகத்துக்கும் சாவு மணி அடித்தது. திரு. வி. பி. சிங்கின் தலைமையிலான புதிய இந்திய நிர்வாகமும், திரு. கருணாநிதியின் தமிழ் நாடு அரசும் வளர்ந்து வரும் அரசியல், வரலாற்று உண்மைகளின் தாக்கத்தினால், வெகுஜன ஆதரவு இம்மியளவும் இல்லாத ஈ. பி. ஆர். எல். எவ் வையும், அதனது சகபாடிகளையும்கைவிடவேண்டி ஏற்பட்டது. திரு. வேலுப்



பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் பேசும் மக்களை உண்மையாகவும் முழுமையாகவும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்ற வகையில் இந்தியாவும், தமிழ்நாடும், ஸ்ரீலங்காவும் விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கீகரித்துள்ளன. இந்திய அமைதிப்படையின் சம்பூரணமான வெளியேற்றத்துடனும், ஈ. பி,ஆர். எல். எவ்.வின் மாகாண அரசின் அறிவுடனும், விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றியீட்டி அதிசக்தி வாய்ந்த ஒரு அரசியல்-இராணுவ சக்தியாக தமிழர்கள், முஸ்லிம்கள் வாழும் பகுதியில் பரிணமித்துள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை நகரிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறியதும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கெரில்லா அமைப்புகள் தமது பிரதேசத் தளபதிகளுடன் திருக்கோணமலை நகருள் பிரவேசித்து அங்கு நிலைகொண்டனர்,

வெற்றி கரமாக கெரில்லாக்கள் நகருக்குள் பிரவேசித்த சமயம் ஆயிரக்கணக்கான தமிழரும் முஸ்லிம்களும் தெருக்களில் பெருந்தொகையாகத் திரண்டு அவர்களை வரவேற்றார்கள்.

விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு நிலை கொண்டு தமிழ்த் தேசிய இராணுவத்தை ஓட விரட்டியதும், தமிழ் புலிகளின் புதிய அரசியல் கட்சியான விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வடக்கிலும் கிழக்கிலும் பாரிய அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டது.விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர்கள் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்து பாரிய அரசியல் கூட்டங்களை நடத்தினார்கள்.கட்சி ஊழியர்கள் வடக்கிலும் கிழக்கிலும் கட்சிக் கிளைகளை அமைத்தார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களை ஒன்று திரட்டி, அவர்களை ஒரு தேசிய சக்தியாக மாற்றி, கட்சியமைப்பைத் தமிழீழத்தில் ஒருங்கிணைந்த ஒரு பலமுள்ள சக்தியாக்குவது தான் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய நோக்கமாகும். இதே வேளை வடக்கையும் கிழக்கையும் வழமைக்குத் திருப்புவதற்கும், சமாதானத்தை நிலவச் செய்வதற்கும் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசுடன் தீவிரமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர் தமிழர்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஆயுத பலத்தை ஸ்ரீலங்கா அரசு பாவிக்கப் போவதில்லை என்ற நம்பிக்கையையும் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு அளித்துள்ளது. இனப்பிரச்சினை சமாதான பூர்வமான பேச்சுவர்த்தைகளினால் தீர்த்து வைக்கப் படும் என்றும், அரசாங்கம் இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு உறுதிமொழி தந்துள்ளார்.

நன்றி - வோய்ஸ்ஒவ் ரைகர்ஸ்

## புதிய சோனக தெரு பகுதிக்கு கிராம சேவையாளர் தேவை

(யாழ். முஸ்லிம் வட்டாரம்)

கிராம சேவையாளர் இன்றி யாழ். புதிய சோனகத் தெரு மக்கள் அவதிப்படுகின்றனர்.

யாழ். முஸ்லிம் பகுதி கிட்டத்தட்ட 3500 குடும்பங்களைக் கொண்டதாக அமைந்திருந்ததினால் அரசின் கொள்கைக்கு அடைய 3 கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் J/45 இலக்கத்தைக் கொண்ட கிராம சேவையாளராலேயே இப்பகுதி நிர்வகிக்கப்பட்டு வந்தது.

தற்போது ஜனசக்தி அவண தனால் புதிய சோனக தெரு மக்கள் கிராம சேவையாளர் இன்றி அவதிப்படுகின்றனர்.

புதிய சோனகதெரு பகுதி ஜனசக்தி குழுக்களும் கிராம சேவையாளர் இன்மையினால் செயல் இழந்து காணப்படுகின்றன.

சென்ற மாதம் 15ஆம் திகதியில் இருந்து இப்பகுதிக்குப் புதிய கிராம சேவையாளர் ஒருவரை நியமித்துள்ளதாக கூறப்பட்ட போதிலும் இப்பகுதி மக்கள் புதிய கிராம சேவையாளர் யார் என்று அறிய முடியாது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## ஏனைய ஆசிரியர்களின் சம்பளம் சலுகைகள் பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டும்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க பொதுச்செயலாளர்

(வடமராட்சி கிழக்கு)

புதிதாக நியமனம் பெற்றுள்ள 25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களைப் போன்ற சம்பளம் லீவு, உட்பட சகல நிபந்தனைகளையும், சலுகைகளையும் அரசாங்கம் வழங்க வேண்டும்''

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கசம்மேளனம் பிரெடரிக் ஈபேர்ட் மன்றம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்திய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளின் கல்விப் பிரச்சினைகள் என்ற விடயம் தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கின் முதல் நாள் நிகழ்ச்சியில்இலங்கைத்தமிழர் ஆசிரியர் . சங்க பொதுச் செயலாளர் திரு. தமகாசிவம்இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கசிரேஷ்ட துணைத் தலைவர் திரு. மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு. என். சோதிநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. மகாசிவம் தொடர்ந்து உரையாற்றும் போது 25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர் தெரிவில் தவறுகள் நிகழ்ந்திருந்தாலும் இனிமேல் அதனைக் கண்டித்துப் பிரயோசனமில்லை. எமது குடும்பத்தில் அங்கத்தவராக சேர்ந்துள்ள ஆசிரியர்களை நல் ஆசிரியர்களாக உருவாக்க வேண்டியது அதிபர்களினதும் ஏனைய ஆசிரியர்களினதும் கடமையாகும்.

பயிலுனர் ஆசிரியர்களுக்கு ஏனைய ஆசிரியர்களைப் போன்றுசம அந்தஸ்து கிடைக்காவிடில் சம அந்தஸ்து போராட்டம் நடத்த தற்போதுள்ள ஒன்றரை லட்சம் ஆசிரியர்களும் தயங்கக் கூடாது.

முதல் நாள் நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தனஞ்செயன் கலந்து கொண்டார்.

இதுவரை போராட்டத்தில் மறைந்த போராளிகளுக்கும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளைக்கும் அஞ்சலிசெலுத்தும் முகமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (36)

## பருத்தித்துறையில் இலங்கை வங்கி விஸா கார்ட்

(பருத்தித்துறை)

இலங்கை வங்கியின் விஸா காட் ஏற்றுக் கொள்ளும் வர்த்தக நிறுவனங்களுக்கான உரிமை வழங்கும் அங்குரார்ப்பண விழா பருத்தித்துறையில் பருத்தித்துறை இலங்கை

### 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்

## கூடுதல் புள்ளி பெற்றவர்களுக்கு மட்டுநகரில் பாராட்டு விழா

(மட்டக்களப்பு)

மாணவர்கள் கல்வியில் மட்

அமைதியற்ற சூழ்நிலையில் தான் நடைபெற்றது.

விஷயமும் வெறும் செய்தி மாத்திரம் அல்ல.

வெளிநாட்டு, உள்நாட்டுப் புலனாய்வுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டில் இனப் பிரச்சினை தீர்ந்து அமைதி நிலவுவதையும் நாடு முன்னேறுவதையும் விரும்புவதில்லை.

அதிகாரப் போட்டியில் வெற்றிபெறத் தவறிய சக்திகளும் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்குக் காத்திருக்கும் சக்திகளும் தீய சக்திகளின் வலைக்குள் சுலபமாகச் சிக்கிக் கொள்ளவும் இடமுண்டு.

அகதிகள் என்ற பெயரில் கடந்த சில வருடங்களாக சும்மா இருந்து சுகம் அனுபவித்து வரும் கும்பல் தீய சக்திகளின் தூண்டுதலினால் மீண்டும் கிழக்கு மாகாணத்தில் இரத்தக் களரியை ஏற்படுத்துவதற்கும் முனைந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளைச் சீண்டிவிட்டு அவர்கள் மீதே எல்லாப் பழிகளையும் சுமத்தும் ஒரு முயற்சியாகவும் கிழக்கு மாகாணச் சம்பவங்கள் அமைந்திருக்கலாம்.

அமைதி தொடர்ந்து நீடிப்பதும் இனப்பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு காண்பதும் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்தின் கையிலும் விழிப்பிலும்தான் தங்கியிருக்கிறது.

திருக்கோணமலைத் தீவைப்பு போன்ற சம்பவங்களை முளையிலேயே கிள்ளியெறிந்து உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

இல்லையேல் இதுவரை கஷ்டப்பட்டு எடுத்து வந்த முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீராகிவிடும்.

சேவையாளராலேயே இப்பகுதி நிர்வகிக்கப்பட்டு வந்தது.

தற்போது ஜனசக்தி ஆவண விநியோகம், வயோதிபர் ஓய்வூதியம், மக்கள் வங்கி கடனுதவி போன்ற செயற்பாடுகளை கிராம சேவையாளர் மூலமே செய்யவேண்டி உள்ள பகுதி மக்கள் புதிய கிராம சேவையாளர் யார் என்று அறிய முடியாது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சில ஜனசக்தி குழுக்கள் இந்நிலைமையினை உதவி அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (52)

மை வழங்கும் அங்குரார்ப்பண விழா பருத்தித்துறையில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் தலைமையில் நிறுவனத்தில் நடைபெற்றது.

அன்றைய தினம் பருத்தித்துறையில் இலங்கை வங்கியின் விஸாகாட் ஏற்றுக் கொள்ளும் வர்த்தக நிறுவனங்களாக முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட ராகுலசூரியன் பிடவை நிலையம், உதயன் புத்தக நிலையம், ராஜன் எலக்ரிக்கல்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் இலங்கைவங்கி யாழ்.மாவட்ட முகாமையாளர் திரு கே. கணேசமூர்த்தி உரிமையை வழங்கி வைத்தார்.

யாழ்.மாவட்ட முகாமையாளர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது இலங்கை வங்கியின் விஸாகாட் திட்டம் மக்களுக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாகும். இலங்கை வங்கி மக்களின் வசதிகள், நன்மைகள் கருதியே பல்வேறு வகையான திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது என்றார்.

(மட்டக்களப்பு)

மாணவர்கள் கல்வியில் மட்டுமல்ல பல்வேறு துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்கள். இந்நிலையில் தமது ஆற்றல்களை பெற்றோர், ஆசிரியர் வழிகாட்டலில் வெளிப்படுத்தல் வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு பொது நூலகம் சர்வோதயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு வழங்கிய பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

மாநகரசபை ஆணையாளர் திரு. கே. கார்த்திகேசு தலைமையிலான இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்,

இன்று பாராட்டப்படும் சிறார்கள் "இளம் கன்று பயமறியாதது" என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் இம்மாவட்டத்தில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையில் தான் நடைபெற்றது.

ஆனால் இச்சிறார்கள் எதுவும் நாம் முகம் கொடுக்க தயார் என்ற நிலையில் இப்பரீட்சையில் கலந்துகொண்டு கூடுதல் புள்ளி பெற்றுள்ளது அவர்களுக்கு மட்டும் பெருமையல்ல. சகலருக்கும் பெருமையை தேடித்தந்துள்ளது.

உளரீதியாகவோ, சமூகரீதியாகவோ பாதிப்பு இன்றி சித்தி பெற்றவர்களுக்கு பாராட்டும் பணியை கல்வி இலாகா செய்ய வேண்டியது. ஆனால் மாநகரசபை பொது நூலகம்சர்வோதயமும்இணைந்து செய்வது குறித்து என் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் என்றார்.

மாணவர்களுக்கு பிரதம அதிதி வெள்ளித்தட்டுகள் வழங்கினார்.

மாஸ்டர் சிவலிங்கம், நூலகர் திரு.கே. சின்னராசா ஆகியோரும் பேசினர். (37)

## சமையல் பாத்திரங்களுக்கு என்ன நடந்தது?

கௌரவ ஆசிரியர்
'ஈழநாதம்'

இந்திய இராணுவமும் அவர்களது கையாட்களும் யாழ்ப்பாண செயலகத்தில் இருந்த சமயத்தில் ஷெல் தாக்குதலினால் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு பொது நிறுவனம் பெருந்தொகையான சமையல் பாத்திரங்களை அன்பளிப்புச் செய்தது. அப்பாத்திரவகைகள் பாதிக்சப்பட்ட சில பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன. அப்போதைய நிர்வாகிகள் கச்சேரியில் தற்போது கடமையாற்றும் ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தரையும் ஒரு லிகிதரையும் விநியோகத்துக்குப் பொறுப்பாக நியமித்தனர். கொட்டடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் வைத்து மேற்படி பாத்திரங்கள் வழங்கப்பட்டன. கொட்டடிப் பகுதி ஏழைகளுக்கென வழங்கப்பட்ட பாத்திர மூடைகளில் பெரும் பகுதியை அன்று வாகனங்களிலும் ஆட்டோக்களிலும் பெருந்தொகையாக வந்து கச்சேரி ஊழியர்கள் அபகரித்துச் சென்றனர். மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர் 'அது கச்சேரி ஊழியர்கள் கோட்டா' எனக்கூறி அள்ளி வழங்கினர். கச்சேரியில் கடமையாற்றும் ஒரு பெண் ஊழியர் நான்கு பெரிய பாத்திரமூடைகளை எமது ஊர் வாடகை வாகனம்மூலம் உரும்பிராயிலுள்ள தமது வீட்டிற்கு கொண்டுபோய்ச் சேர்த்தார். மக்களுக்கு ஒரு சில மூடைகள் மாத்திரம் வழங்கப்பட்ட பின் வாகனம் யாழ். பெரியகடைப் பகுதியை நோக்கிச் செலுத்தப்பட்டது. லிகிதரின் அண்ணனின் மருந்துக் கடைக்குள் மிகுதி மூடைகள் முழுவதும் இறக்கப்பட்டன. மூன்று நாட்களுக்குப் பின் மேற்படி பாத்திரங்கள் யாழ். நகரிலுள்ள எல்லா மணிக்கடைகளினுள்ளும் அடுக்கிவைக்கப்பட்டு, மலிவு விலையில் விற்கப்பட்டன. இதைப்பற்றி ஆதாரபூர்வமாக நாம் அப்போது கச்சேரி நிர்வாகம் நடத்தியவர்களி

### மக்கள் மடல்

டம் முறையிட்டோம். பாத்திர விநியோகம் நிறுத்தப்பட்டதேயொழிய மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர்மேல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாத்திரவிநியோகம் நிறுத்தப்பட்ட பின், கச்சேரிக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மேற்படி சமையல் பாத்திரமூடைகளுக்கு என்ன நடந்தது என்பதைதற்போது பதவியிலுள்ள அரச அதிபர் விசாரித்து மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவாரா?

எஸ். இராமச்சந்திரன்
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

## தொழில்நிறுவனத்திற்கு நிவாரணம் தொழிலாளிக்கு இல்லை

ஆசிரியர்
'ஈழநாதம்'

வன்செயல்களினால் சுயதொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 4,000 நிவாரணமாக வழங்கப்படுகின்றது. வரவேற்கவேண்டிய விடயம்.

ஆனால் சுயமாகத் தொழில்களில் ஈடுபட்டவர்களைத் தவிர்ந்த ஏனைய பலர் தொழில் பாதிப்பின் காரணமாக பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள் என்பது பற்றி அதிகாரிகள் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

ஒரு தொழில் ஸ்தாபனம் வன்செயலினால் பாதிப்புக்குள்ளானால் நிவாரணப்பணமும் கடன் வசதிகளும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அதே ஸ்தாபனத்தில் பணி புரிந்து தொழில் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஊழியர்களுக்கு இந்த நிவாரணம் இல்லை. அவர்கள் வட்டார அதிகாரிகளிடம் சென்றால் உதாசீனப்படுத்தப்பட்டு விடுகிறார்கள்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளவர்களில் நானும் ஒருவன். வன்செயல் காரணமாகக் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக வேலையில்லை. வருமானம் இல்லை. நிவாரணம் இல்லை. இதுபற்றி யாரிடம் முறையிடுவது?

\- எஸ். பெருமாள்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

## ஆலய பிரதம குரு பொற்கிழி வழங்கி கௌரவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விக்னேஸ்வரர் ஆலய பிரதம குருக்களுக்கு பல வருடங்கள் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ள சிவஸ்ரீ வி. வரதராஜக் குருக்கள் அண்மையில் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய முன்றலில் பரிபாலன சபை தலைவர் திரு. வி. சிவகணேசன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரியாவிடையும் பொற்கிழியும் வழங்கப்பட்டது.

இந்து இளைஞர் மன்ற தலைவர் திரு. எம். சிவநேசராசா, கல்விமான் கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## க. பொ. த. (சா.தர) பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்தவர்கள் புலிகளிடம் அகப்பட்டனர்

(கல்லாறு நிருபர்) களுவாஞ்சிக்குடி)

கோட்டைக்கல்லாறுபெரிய கல்லாறு போன்ற இடங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதிக்கொண்டிருந்தவர்களை கல்லாறு பொறுப்பாளர் "சீனு" தலைமையிலான புலிகள் குழுவினர் பரீட்சார்த்திகளுக்கு இடைஞ்சல் ஏற்படா வண்ணம் கண்டுபிடித்து அப்புறப்படுத்தினர்.

அவர்களைக் கௌரவமான முறையில் விசாரணை செய்ததில் இன்னுமொருவருக்காக பரீட்சை எழுத வந்ததை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

கல்முனைப் பகுதி பரீட்சை நிலையம் ஒன்றில் பரீட்சை எழுதியவர் சவூதியில் இருந்து ரூபா 15000/- பெற்றுக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பரீட்சை எழுத வந்ததை ஒப்புக்கொண்டதாக புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (45)

ஈழநாதம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

# சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட வாகனங்கள் அதிக விலைக்குவிற்பனை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குஅரசாங்கத்தால்சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட வாகனங்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதிக்கு புகார்கள் வந்துள்ளன.

இத்தகவலை அமைச்சர்ரஞ்சன் விஜயரட்னா நேற்றைய செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

இதனை ஜனாதிபதி நேற்று முன்தினம் அமைச்சரவைக்கு தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக தேடுதல் நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொள்வார்கள்எனவும் அவர் சொன்னார். இந்த வாகனங்கள் தற்போது உள்ள இடங்கள் அவற்றின் உரிமையாளர்கள் போன்றதகவல்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்படி அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் இந்த வாகனங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. அரசின்அனுமதியின்றி இவற்றைஎவரும்வைத்திருக்க முடியாது என்றும் அவ்வாறு வைத்திருந்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அமைச்சர்குறிப்பிட்டார்.

சில எம். பிக்களுக்கும்மாகாணசபைஉறுப்பினர்களும்தாங்கள் வாங்கிய வாகனங்களை அதிக லாபத்துடன் விற்றுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## தையல் வேலை, பன்னை வேலை குடும்பத்தின் வருமானத்திற்கு உதவுகிறது

- சித்திரலேகா

(யாழ்ப்பாணம்)

மனித நேய நிறுவனங்கள் விதவைகளுக்குப் புதிய வழிகளைக் காட்டுவதில்லை. பெண்கள் வீட்டுக்குரியவர்கள் என்ற அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்கிறோம். தையல் வேலை, கோழி வளர்ப்புப் போன்ற வேலைகளுக்கான ஊக்குவிப்பைத்தான் வழங்குகிறோம். இதில் மாற்றம் வேண்டும். மேலதிக வருமானத்துக்கான இந்தத் தொழில்கள் உதவும். குடும்பத்தின் வருமானத்துக்கு உதவாது. இவ்வாறு நேற்று சுவீடன்சர்வதேசஅபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட இனக்குழு வன்செயல்களினால் விதவைகளாக்கப்பட்டோர் பற்றிய ஆய்வுப் பட்டறையில் பேசும்போது சித்திரலேகா மௌனகுரு தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஆய்வுப் பட்டறைக்கு கலாநிதி கா. சிவத்தம்பி தலைமை தாங்கினார்.

சித்திரலோகா மௌனகுரு தொடர்ந்து பேசுகையில் 'விதவைகளும் புனர்வாழ்வும்' என்ற விஷயம் பற்றித் தொடர்ந்து பேசுகையில், விதவைகளில் தொழில் திறன் இல்லாதவர்களும் இருக்கிறார்கள் என்றும், தையல் வேலை, பன்னை வேலைகளிலிருந்து தள்ளி வருமானத்தைத் தரும் தொழில் களைத் தரவேண்டும் என்றும் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் பற்றி உதவி வழங்கும் நிறுவனங்கள் சவனிப்பதில்லை என்றும், குழந்தைகள் தனிப்பட்டவர் சொத்தல்ல அவர்கள் சமூகத்தின் சொத்து என்றும் தெரிவித்தார்.

சித்திரலேகா தொடர்ந்து பேசுகையில்:

திருமணம் எமது சமூகத்தின் பாரிய அம்சம். சமயம் சாதி, சீதனம் ஆகியன இதிலடங்கும். விதவைகள் திருமணம் என்னும் போது இந்தப் பிரச்சினைகளைத்தாண்ட முடியுமா? திருமணம் செய்யும் போது சமூக மட்டத்துக்குள் தான் தேட வேண்டியுள்ளது. இந்த வட்டத்துக்குள் நின்று விதவைகள் திருமணம் பற்றிப் பேசுவது சாத்தியம் ஆகுமா? புனர்வாழ்வு, மறுவாழ்வு அளிக்கின்றேன் என்ற அடிப்படையில் தியாகம் செய்து விதவையை மணம் செய்கிறேன் என்று சொல்ல வேண்டாம். விதவைகள் பெண்களாக இருப்பதால் அது பெண்கள் பிரச்சினைஎன்றார்,

சறோஜா சிவச்சந்திரன் பேசுகையில், விதவைகளுக்கான ஒரு நீண்டகாலத் திட்டம் வேண்டும் என்றும், சிறு உதவிகளைக் கொடும்பதில் பிரயோசனம் இல்லை, அவர்கள் சுரண்டப்படுகிறார்கள் என்றும், விதவைகள் அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்தப்பட வேண்டும் என்றார்.

செல்வி சுபோதினி பிரான்கிஸ் தனது ஆய்வறிமுகத்தில் வடக்கு - கிழக்கில் வன்செயல்களின் பின் 4440 விதவைகள் இதில் 3500 வட மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தார்.

எந்த அடிப்படையில் விதவைகளை அணுகலாம்? எப்படி அவர்களுக்கு உதவவேண்டும்? என்பதைக் கண்டறியக் கூடிய வகையில் பட்டறையில் ஒரு வினாக்கொத்து நிர்ணயம் செய்யப்பட்டது.

## வவுனியா பஜார் வீதியில் பல நோ. கூ. சங்கத்தில் விற்பனைக்குப் பொருளில்லை

(வவுனியா)

வவுனியா பஜார் வீதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மொத்த விற்பனை நிலையத்தில் விற்பனை செய்வதற்கு மொத்த விற்பனைப் பொருட்கள் எதுவும் இல்லை என்று பொது மக்களினால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரிமையாகவுள்ள மேற்படி நிலைய இரண்டு மாடிக் கட்டடத்தைக் கொண்டது. இது தற்போது வெறுமையாக இருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதுவருட தினத்தை முன்னிட்டாவது இங்கு விற்பனை செய்யப் பொருட்களைச் சம்பந்தப்பட்டவர்கள் கொள்வனவு செய்து மலிவாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோருகின்றனர். (தி)

## புத்தாண்டிற்கு முன் ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வரும் புத்தாண்டுக்கு முன்னதாக ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு கூடியளவு அக்கறையுடன் செயலாற்றுவதாக யாழ் செயலாக ஓய்வூதியக் கணக்காளர் தெரிவிக்கிறார்.

அனேகமாக புத்தாண்டுக்கு முன்பாக ஓய்வூதிய அனைவருக்கும் கொடுபணம் வழங்கப்பட்டு விடும். இன்று ''வவுச்சர்கள்'' அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

## தகமைபெற்ற சகலருக்கும் பாகுபாடு இன்றி உயர்கல்வி

### லலித் சொல்கிறார்

(பண்டாரகம)

ஒவ்வொரு வருடமும் சுமார் பதினெட்டாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றனர் ஆனால் சுமார் ஆறாயிரம் பேர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற வாய்ப்பு பெறுகின்றனர். இது நமது நாட்டுக்கு பெரிய இழப்பாகும்.

இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி பண்டாரகமவில் நடைபெற்ற மகாபொல வைபவத்தில் உரையாற்றும் போது கூறினார். தொடர்ந்து பேசிய அமைச்சர் உயர்கல்வி பெறுவதில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்கி எவ்விதபாகுபாடுமின்றி தகமை பெற்றுள்ள சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. ஆங்கில மொழியை கற்பதற்கு வசதி படைத்தவர்கள் மாத்திரம் வாய்ப்பு பெறுவதற்கு தாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அமை பயன்படுத்தப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலவசக்கல்வியின் தந்தையான கன்னங்கரா ஆரம்பித்துள்ள இலவசக் கல்வி முறையை பூர்த்தி செய்து வைப்பதே தமது இலட்சியம் என்றும், கல்வியை சகலரும் பெறுவதற்கு சம வாய்ப்பினை வழங்குவதே தமது இலட்சியம் எனவும் அமைச்சர் கூறினார்.

## சிற்றூர்அவை சந்திப்பு

(நமது அலுவலக நிருபர்)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அமைப்பாளர் ப. மூர்த்தி மாவட்டம் தோறும் தெரிவுசெய்யப்பட்ட சிற்றூர் அவைசொற்குழு உறுப்பினர்களைச் சந்தித்து வருகின்றார். இம் மாதம் 7 ஆம் திகதி மன்னார் மாவட்டததிலும் 11 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைச் சந்திக்க திரு. மூர்த்தி ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக அறிவிக்கின்றார்.

## ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கியில்- மீளக்குடியமர்தல் நிவாரணம் திங்கள் வழங்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

9ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து மீளக்குடியமர்த்தல் நிவாரணம் நாலாயிரம் ரூபா வழங்கப்படும் கிராமசேவகர் பிரிவுகள் ... டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மத்தி என்பன.

9ஆம் திகதி ஆயிரம் ரூபா நிவாரணம் பெறத் தவறியவர்களுக்கு ஒருசந்தர்ப்பமாகவழங்

## விலைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

சிகள் செய்வதாகவும், அரசாங்க அதிபரின் உத்தரவுகளுக்கு விலைக்கட்டுப் பாட்டு விதிகளைக் கடைப்பிடிப்போர் பணியாதவிடத்து இதுபற்றி அமுல் படுத்தக் கூடிய அமைப்புடன் தாம்தொடர்புகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக வேண்டி வரும் எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்

## நிவாரணம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஸ்ரான்லிவீதி மக்கள் வங்கியில் மீளக்குடியமர்தல் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்வு இரண்டாம் கட்ட நிவாரணக் கொடுப்பனவு நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமையும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 9 ஆம் திகதி திங்கட்கிழமையும் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அதன் கிராமசேவகர் பிரிவு விபரங்கள் பின்வருமாறு:-

6ஆம் திகதி சனிக்கிழமை: ஏழாலை தெற்கு, 8-ஆம் திகதி ஞாயிறு: ஏழாலை மேற்கு, 9-ஆம் திகதி திங்கட்கிழமை போயாதினம்: புன்னாலைக் கட்டுவன்.

இதுவரை தமது நிவாரணப் பணத்தை பெறத் தவறிய வேறு பகுதி விண்ணப்பத்தாருக்கும் இத்தினங்களில் நிவாரணப்பணம் வழங்கப்படும் என சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## சனி, ஞாயிறு

## மட்டக்களப்பு தொண்டர் ஆசிரியர் ஆக 1025 பேர் விண்ணப்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் பயிலுநர்களாக சேர்த்துக் கொள்வதற்காக 1025 பேர் தாம் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்துள்ளதாக விண்ணப்பித்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் சுமார் 250 தொண்டர் ஆசிரியர்கள் தான் நியமனம் இன்றி இருப்பார்கள் என கல்வி இலாகா எதிர்பார்த்தது. ஆனால் இவ்வளவு தொகையினர் இருந்தார்களா? என கேள்வி எழுந்துள்ளது.

இம் மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்களிலும் பார்க்க விண்ணப்பித்தோர் தொகை அதிகமாகவுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஏற்கனவே அமைச்சுக்கு சமர்பிக்கப்பட்

வாய்ப்பு பெறுவதற்கு தாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கிராமப்புற நகர்ப்புற பாடசாலைகளில் சம தரத்திலான கல்வி போதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மகாபொல நிதியத்துக்கு ஐம்பது கோடி ரூபா கிடைத்துள்ளதாகச் சொன்ன அமைச்சர் வசதி குறைந்த சிறுவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு இந்த நிதியை தாம்

வீதி கிளையில் வைத்து மீளக் குடியமர்த்தல் நிவாரணம் நாலாயிரம் ரூபா வழங்கப்படும் கிராமசேவகர் பிரிவுகள் வருமாறு,

கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டுக்குளி, குருநகர் மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ். பட்டினம், பெரியகடை கொட்டடி, நாவாந்துறை, சோனகத்தெரு, அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, வண்ணை வடகிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர்தெற்கு கோண்டாவில் மேற்கு, கோண்

9ஆம் திகதி ஆயிரம் ருபா நிவாரணம் பெறத் தவறியவர்களுக்கு ஒருசந்தர்ப்பமாகவழங்கபபடவுளள கிராமசேவகர் பிரிவுகள் வருமாறு:

அரியாலை கிழக்கு, அரி மேற்கு, அரியாலை மத்தி, வண்ணை வடகிழக்கு, வண்ணை வடமேற்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலிகிழக்கு கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மத்தி

## நிவாரணம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தில் ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை. இதில் ஈடுபடுபவர்கள் எவராயினும் கடுமையான நகிவடிக்கை எடுப்பேன். மோசடிகளைத் தடுப்பதற்காகவே நிவாரணம் வழங்க முன்பு பெயர்ப்பட்டியல் பொதுமக்கள் பார்வைக்குத் தற்போது வைக்கப்படுகின்றன.

நிவாரணம்பெறுவதற்கான நிவாரண அட்டை இதுவரை கிடைக்காதவர்கள் என்னிடம் நேரடியாக விண்ணப்பித்தால் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (37)

சனி, ஞாயிறு

# இலங்கை வங்கி 2வது கிளையில் புனர்வாழ்வு நிவாரணம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வைத்து நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா கொக்குவில் மேற்கு கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த 1209 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை உற்பத்தி முயற்சிக்கான 4000 ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராம சேவகர்கள் பிரிவுகள் வருமாறு: வண்ணை வடமேற்கு வண். வட கிழக்கு, கந்தர் மடம், திருநெல்வேலிக் கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு கொக்குவில் மத்தி என்பனவே.

இது சம்பந்தமா நிவாரணம் பெறுபவர்கள் தத்தமது கிராமசேவகர்ளுடன் தொடர்பு கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் திரு. செ. சம்பந்தநாதன் அறிவித்துள்ளனர்.

...யாவும கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஏற்கனவே அமைச்சுக்கு சமர்பிக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்கள் பெயர் பட்டியலுடன் ஒப்பிடப் பட்டு பின்னர் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். (37)

## அமைச்சர்கள்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

டைம்ஸ் பத்திரிகை செய்தியால் அமைச்சர் சிறிசேனாகூரேக்கும் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும் இடையில் தப்பபிப்பிராயம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தச் செய்தியால் அமைச்சர் கூரேக்கு அவமானத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சொன்னார்.

அரசாங்கத்துக்கும் பத்திரிகைகளுக்கும் இடையிலிருக்கும் நட்புறவு தொடர்ந்தும் இடம்பெற வேண்டுமானால் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய கட்டுரைகள் தவிர்க்கப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

## அரசு......

(1-ஆம் பக்கத்தொடர்ச்சி)

லும் ஏற்படக் கூடுமென்றாலும் மேல் மட்டத்தில் இருதரப்பினருக்குமிடையில் நெருங்கிய புரிந்துணர்வும் நட்புறவும் தொடர்ந்திருந்து வருகிறதென்றும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரமான தீர்வு காண்பதிலும் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியும் சாந்தியும் தொடர்ந்து நிலவவும் இருதரப்பும் ஆர்வமாக இருப்பதாகவும் ஜெனரல் ரணதுங்கா மேலும் சொன்னார்.

வடக்கிலும் கிழக்கிலும் எந்தவித அசம்பாவிதமுமில்லாமல் அமைதி நிலவுவதாகவும் அறிக்கைகள் கிடைத்திருப்பதாகவும் ஜெனரல் ரணதுங்கா மேலும் சொன்னார்.

# நாளை இரவு சந்திப்பு

நாளை சனிக்கிழமை இரவு ஜனாதிபதி பிரேமதாசா குழுவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) தலைமையிலான குழுவுக்குமிடையில் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது.

## வவுனியா...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

தினமும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று வந்தன. இவை பற்றி எவரிடமும் விசாரிக்க முடியாத நிலையில் பொலிஸ் நிர்வாகம் இயங்கி வந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று அப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்கள் நின்றுவிட்டன. மக்கள் சுதந்திரமாகத் திரிவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் பொலிஸ் நிர்வாகம் நடந்து கொண்ட முறையினால் தான் மக்கள் பொலிஸாரை மதிக்காத நிலை ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஆயிரம்....

( 1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

30க்கும் 60க்கும் இடைப்பட்ட ஆசனங்களைக்கொண்ட பஸ்களை மட்டும் தான் இந்தக் கடனுதவித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யலாம். இத்தகவலை கொழும்பு தனியார் பஸ் போக்குவரத்து நிறுவனத்தின் தலைவர் எச். ரி. ஜே. கருணானந்த தெரிவித்தார்.

## ஹாட்லி....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

போது பலத்த சேதமடைந்திருந்தன. ஹாட்லிக் கல்லூரியில் வகுப்புக்கள் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திலும், மெதடிஸ்த கல்லூரியின் வகுப்புக்கள் வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற்று வந்தன.

இதனால் இந்தக் கல்லூரி மாணவிகளும் ஆசிரியர்களும் பலத்த சிரமங்களை அனுபவித்து வந்ததை அண்மையில் இந்தக் கல்லூரிகளுக்கு வந்து பார்வையிட்ட கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் அபிவிருத்திச் சபை, பழைய மாணவர்கள் சங்கம் என்பவற்றுடன் ஆலோசனை செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கிராமசேவகரை-...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரமணியம், செயலாளர் திரு. ஏ. ஜே. மங்களராஜ், பொருளாளர் திரு. எஸ். பத்திநாதன் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மேற்படி சந்திப்பில் கிராம சேவை அலுவலகர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையடுத்து பின்வரும் செயல்பாடுகளுக்கு அரச அதிபர் இணக்கம் தெரிவித்தார்.

★ கச்சேரியில் கிராம சேவை அலுவலகர்களுக்கென தனியாக நிர்வாகக் கிளை அமைத்தல்.

★ கிராமசேவை அலுவலர்களுக்கான அலுவலக உபகரணங்கள் தாமதமின்றி வழங்குதல்.

★ கிழக்கிலங்கை கிராம சேவை அலுவலகர் சங்கக் கட்டிடம் அமைக்கப் பொருத்தமான இடத்தில் காணி வழங்குதல். (37)

## புத்தாண்டு.:.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணக்கூடியதாகவுள்ளது.

இதே சமயம், வவுனியாப் பகுதியில் இந்த ஆண்டு நெல் விளைச்சல் அதிகரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத கடைகளில் கூடப் பட்டாசு விற்பனை செய்யப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. (தி)

## கூட்டுறவு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவுத் துறையில் அரசியல், ஊழல், மோசடி என்பன தவிர்க்கப்பட்டு அதன் சேவை அபிவிருத்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் சொன்னார்.

# குடும்பஸ்தர் தற்கொலை

(வவுனியா)

வவுனியா புதுக்குளத்தில் ஏழு பிள்ளைகளின் தந்தை கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

வேலுப்பிள்ளை மாரிமுத்து (வயது50) என்பவரே மேற்படி தற்கொலை செய்து கொண்டவராவார்.

## பிறப்பு..,.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

வதற்கான புத்தகங்கள் தட்டுப்பாடு நிலவியபோதும் தாம் இந் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாக யாழ்ப்பாண பிறப்பு இறப்பு பதிவு காரியாலய மேலதிக மாவட்ட பதிவாளர் தெரிவிக்கிறார்.

மேலும் அவ்வதிகாரி இது பற்றி கூறுகையில் வரும் பத்தாம் திகதியிலிருந்து அலுவலக நாட்களில் காலை 9·00 மணியிலிருந்து 11·00 மணி வரைக்கும் பிறப்பு இறப்பு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

## பண்டிதர்...

)1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

லயத்தில் ஆதிதிராவிடா பாசா முன்னேற்ற சங்கத்தால் நடாத்தப்பட உள்ளது.

இதற்கு யாழ்.கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தலைமை தாங்குவார் என தெரிகிறது. (லோ)

## புத்தகம்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்பவற்றை பெற்றுக் கொள்ளவே இவை அமைக்கப்படவுள்ளன.

பல இடங்களில் பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் அதிக விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் புகார்களையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நிதர்சனம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

நிதர்சனம்தொலைக்காட்சி சேவைக்கு பொறுப்பான சி. பரதன் உட்பட பலர் இதில் நிதர்சனம் தொலைக் காட்சி சேவையை எதிர் காலத்தில் எவ்வாறு திட்டமிட்டு வழி நடத்திச் செல்லலாம் என ஆலோசனையும் அறிவுரைகளும்பகிர்த்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் பலராலும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சிறந்த தமிழ் கலைஞர்களுக்கு இடமளிக்காதது குறித்து கண்டனமும் அக்கலைஞர்களுக்கு நிதர்சனம்மூலம் வாய்ப்பளிப்பதற்கான தீர்மானம் முன்மொழியப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது